

# புனித லூர்து மாதா தேவாலயம்




45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, பேராக் மேற்கு மலேசியா

**பங்கின் குருவானவர்கள்: அருள் தந். ரோபட் டேனியல் & அருள் தந். சைமன் ஆனந்த்**

**மறைத்திரு திருத்தொண்டர் சந்தனசாமி பீட்டர்**

Tel: 05-5279349 Fax: 05-5276671

அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org


**திருத்தந்தையின் கருத்து : ஆப்ரிக்காவில் உள்ள இள மக்கள்: ஆப்ரிக்காவில் உள்ள இள மக்கள் கல்வியும், தங்களின் சொந்த நாடுகளில் வேலை செய்ய வழியும் பெற்றிட வேண்டுமென்று**

**செப்டம்பர் மாத கரு : கிறிஸ்துவில் எல்லாருக்கும் மதிப்பளித்து உலகத்தோடு நட்புறவு கொள்ளுவோம்.**

**பங்கில் திருப்பலிகள்**

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| செப் 9 ஞா | காலை 7.00 | திருப்பலி (த) | பொதுக்காலம் 23ஆம் ஞாயிறு |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ, ம) | பொதுக்காலம் 23ஆம் ஞாயிறு |
| செப் 16 ஞா | காலை 7.00 | திருப்பலி (த) | பொதுக்காலம் 24ஆம் ஞாயிறு |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ, ம) | பொதுக்காலம் 24ஆம் ஞாயிறு |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ) | சிறார்களுக்கான திருப்பலி @ பெர். மையம் |
| | மாலை 5.30 | நவநாள்/ திருப்பலி (த) | புனித செபஸ்தியார் சிற்றாலயம், முனிசிபல் |

**பங்கு நடவடிக்கைகள்**

| **செப் 10~15** | **மாலை 7.30** | **புலுமாதே** | **அதிச வாரம்** |
|---|---|---|---|
| செப் 10 திங் | மாலை 7.45-9.15 | பெர். மை 2-2 | RCIA |
| செப் 11 செவ் | காலை 8.30 | பெர். மை 1-3 | பங்கு பரிந்துரை குழு |
| செப் 12 புதன் | மாலை 8.00 | பெர்.மை 2-3&2-5 | சீடத்துவ நிகழ்வு |
| செப் 13 வியா | மாலை 7.00 | ஆலயம் | முன்னோன் & வாசகர் பயிற்சி |
| | மாலை 7.45-9.15 | பெர். மை 2-2 | RCIA |
| செப் 14 வெள் | மாலை 7.30 | ஆலயம் | குழந்தைகள் திருமுழுக்கு விளக்கவுரை (பெற்றோர்கள் & ஞானப்பெற்றோர்கள்) |
| செப் 15 சனி | மாலை 4.30 | ஆலயம் | குழந்தைகள் திருமுழுக்கு |
| | மாலை 5.30 | ஆலயம் | செபமாலை/ சகாயமாதா நவநாள் |
| **9 செப் ~ 16 செப் 2018 வரை மறைக்கல்வி வகுப்புகள் நடைப்பெறாது. மீண்டும் 23/9/ 2018 வகுப்புகள் வழக்கம் போல் நடைபெறும்.** | | | |

<u>2018 அக்டோபர் மாத திருமணம்</u>

அக் 6 மாலை 4.30 திருமணம் (த) தோணி பிரகாஷ் த/பெ ஜோசப் & ரெஜினா தமிழ்செல்வி த/பெ சத்தி

ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருமணத்தில் யாருக்காவது ஆட்சேபம் இருந்தால் குருவானவரிடம் உடனடியாக தெரிவியுங்கள்.

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

1. **5ஆம் படிவ மாணவர்களின் சான்றிதழ்களும், புகைப்படங்களும் :** சமீபத்தில் உறுதிபூசுதல் அருள்சாதனம் பெற்றவர்கள் தயவு செய்து உங்கள் சான்றிதழ்களையும், புகைப்படங்களையும் 16 செப் 2018 (ஞாயிறு) காலை 10.30க்கு பெர்.மை 1-1இல் பெற்றுக்கொள்ளவும்.
2. **மலேசிய தின உயர் துதி 2018:** மலேசிய கிறிஸ்தவ கூட்டமைப்பு பினாங்கு ஒருங்கிணைப்பு செயல்குழு மலேசிய தின உயர் துதி 2018 நிகழ்வுக்கு கனிவுடன் உங்களை வரவேற்கிறது. கருப்பொருள்: உங்களுள் இருக்கும் கிறிஸ்து, மகிமையின் நம்பிக்கை. நாள்: 17 செப் 2018 (திங்). நேரம்: காலை 10.00 முதல் மதியம் 12.30வரை. இடம்: ஜோர்ஜ்டவுன் பாப்டிஸ்ட் ஆலயம், **Impact L3 2, Jalan Larut, 10050 Penang**
3. **அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய நிலவரம்:** ஈப்போ நகராண்மைக் கழகத்திடமிருந்து சிற்றாலயம் கட்டுவதற்கான அனுமதியை நாம் பெற்றுவிட்டோம். கட்டிட வரைபட திட்டத்தை நகராண்மைக் கழக அங்கீகாரத்திற்கு நாம் சமர்ப்பிப்போம்.
4. **மூத்தோர் பணிக்குழு:** அடுத்த ஒன்றுகூடுதல் 18 செப் 2018 (செவ்) காலை 9.30க்கு பெர். மையத்தில் திருப்பலியுடன் தொடங்கும். 60 வயதுக்கு மேற்பட்ட பங்கு மக்கள் கலந்துக்கொள்ள வரவேற்கப்படுகிறீர்கள்.

5. **அனைத்து UPSR** மாணவர்களுக்கு **: UPSR** மாணவர்களுக்கு பொதுத்தேர்வு நடைபெற இருப்பதால் செப்டம்பர் மாதம் மட்டும் மறைக்கல்வி வகுப்பிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றது. மீண்டும் மறைக்கல்வி வகுப்புகள் அக்டோபர் மாதத்திலிருந்து வழக்கம்போல் நடைபெறும்.

6. **மலேசிய நம்பிக்கை நிதிக்காக வசூலிக்கப்பட்ட தொகை:** மலேசிய கத்தோலிக்க திருச்சபை தேசிய ஒருமைப்பாட்டுடன் மலேசிய நம்பிக்கை நிதிக்காக வசூல் செய்யப்பட்ட தொகை ரிம 1,143,653.10. பினாங்கு மறைமாவட்டத்தின் கீழ் வசூலிக்கப்பட்ட தொகை ரிம 179,616.15

7. **நன்றி தந்நை சைமன் ஆனந்த்**: தந். சைமன் ஆனந்த் 1 அக் 2018லிருந்து கம்பார், திரு இருதய ஆண்டவர் ஆலயத்திற்கு பங்கு குருவானவராக செல்கிறார். அவர் 2015லிருந்து பங்கில் பணியாற்றி வருகிறார். இந்த லூர்து மாதா பங்கில் மக்களின் நலனுக்காக செய்த அவரின் அனைத்து அர்ப்பணிப்பிற்கும் பங்கின் சார்பாக நான் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இவரின் பிரியாவிடை திருப்பலி 30 செப் 2018 (ஞாயிறு) நடைபெற இருக்கிறது. அவர் இரண்டு திருப்பலிகளையும் நிறைவேற்றுவார் (காலை 7.00 & 9.00). வாருங்கள், இணைந்து அவரின் புதிய நியமனத்திற்காக மன்றாடுவோம்.

8. **பங்கு மேய்ப்புப்பணி மாநாடு 2018**: நாள்: 28 அக் 2018 (ஞாயிறு) நேரம்: மதியம் 12.00 ~ மாலை 5.00 இடம்: பெர். மையம். பமேப குழுவால் நியமிக்கப்பட்ட அனைத்து அதிச மற்றும் பணிக்குழுக்கள் மற்றும் அனைத்து தலைவர்களும், துணைத் தலைவர்களும் இந்த பங்கு மாநாட்டிற்கு அழைக்கப்படுகிறீர்கள்.

9. **பங்கு திட்டமிடுதல் 2019**: அடுத்த வருடத்திற்கான நமது பங்கு கருத்து: **சகோதரத்துவம்.** அனைத்து பங்கு பணிக்குழுக்கள் மற்றும் அதிச தயவு செய்து பங்கு கருத்தையொட்டியதாக உங்களது நிகழ்வையும், செயல்பாடுகளையும் திட்டமிடுங்கள். அனைத்து திட்டங்களும் 23/9/18க்கு முன்பாக பங்கு அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும். தயவு செய்து பதிவு பாரங்களை பங்கு அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். ' உன் செயல்களை ஆண்டவரிடம் ஒப்படை; அவற்றை வெற்றியுடன் நிறைவேற்றுவாய்.' **நீதி மொழிகள் 16:3**

10. **அடுத்த குழந்தைகள் திருமுழுக்கு (ஆ):** நாள்: 15 செப்டம்பர் 2018 (சனி), நேரம்: மாலை 4.30 மேல் விபரங்களுக்கு பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

11. **புத்தக விற்பனை:** தந்தை இக்னேசியஸ் குவான் அவர்களின் "நாங்கள் நினைவில் கொள்கிறோம், நாங்கள் கொண்டாடுகிறோம், நாங்கள் நம்புகிறோம்" என்ற திருப்பலி புத்தகம் உள்ளது. ஒரு புத்தகம் ரிம 65/-

12. **பேராக் திருமண்டல அளவில் கொண்டாட்டம் 3 (இளைஞர்களுக்காக): கருப்பொருள்:** "வேறுபாட்டை ஏற்படுத்துதல்" நாள்: 15 செப்டம்பர் 2018 (சனி). நேரம்: காலை 8.00 ~ மாலை 6.00 வரை. இடம்: கம்பார், திருஇருதய ஆண்டவர் ஆலயம். கட்டணம்: ரிம10.00 தொடர்புக்கு: ரீனா (016-4665236) அல்லது PDYN அலுவலகம் (04-2274851)

13. **"ஆவி வல்லமைமிக்க நம்பிக்கை" கருத்தரங்கு (ஆ):** நாள்: 12, 13 & 14 செப் 2018 (புதன்- வெள்) நேரம்: மாலை 7.30 ~ 10.00 வரை. இடம்: புனித சகாயமாதா தேவாலயம், ஈப்போ கார்டன். பேச்சாளர்: ஜூட் அந்தோன் ஒற்றுமை பகிர்வு: ரிம 10.00 தொடர்புக்கு: கேனா லாவ் (012-5350333) அல்லது தோமஸ் ஜீ (012-5182818)

14. **பங்கு சந்தா: உங்கள் கவனத்திற்கு,** 2018ஆம் ஆண்டுக்காக 1283 உறைகள் வினியோகிக்கப்பட்டன. ஜூன் 2018 வரைக்கும் **509 (39.67%)** சந்தாதாரர்கள் மட்டுமே செலுத்திக்கொண்டிருக்கின்றனர். இன்னும் **774 (60.33%)** சந்தாதாரர்கள் செலுத்த தொடங்கவில்லை.

15. **மேற்கு திசை அதிச-வின் காலை சிற்றுண்டி:** மேற்கு திசை அதிச 16, 23 & 30 செப் 2018 (ஞாயிறு) காலை 7.00 & 9.00 மணி திருப்பலிகளுக்கு பிறகு விற்பனை செய்யவுள்ளனர். கிடைக்கக்கூடிய பணம் கிறிஸ்து அரசர் சிற்றாலய கட்டிட நிதிக்கு சேரும். மதிய உணவு பொட்டலங்களாகவும் விற்கப்படும். தயவு செய்து உங்களது ஆதரவை தாருங்கள்.

16. **கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டட நிதி ஆகஸ்டு 2018 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம்- **411,719.40** அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்- **464,282.19** (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும்)

02/09/18 **திருப்பலி வசூல்கள்: காலை 7.00** - RM 1,061.55 **காலை 9.00** - RM 1,169.45 **மொத்தம்**- RM 2,231.00

**2018** - RM 585.00 **ஏழைகளுக்கு**- RM 2,166.45

நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம் என்று ஆங்கிலத்தில் எழுதவும்